**CC No.59/2021** **Dated 10.07.2025**

**PW - 1 - ராஜேந்திரன், த/பெ கருப்பையா**

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை)**

**1)** எனக்கு மொத்தம் எத்தனை மக்கள் என்றால் 4 மகன்கள், அவர்கள் மணிகண்டன், வெங்கடேஷ், சுந்தர்ராஜன், சீனிவாசன் ஆவார்கள். நான், எனது 4 மகன்கள் அனைவரும் ஒரே கூட்டுக்குடும்பமாக குடியிருக்கிறோம் என்றால், சரிதான். எனது மகன்கள் 4 பேரில் ஒருவர் மட்டும் இராணுவத்தில் பணிபுரிகிறாரா, அவர் யார் என்றால், சீனிவாசன். எங்களுக்கும், எதிரிகள் குடும்பத்திற்கும் இடையே வாய்க்கால் சம்பந்தமாக எத்தனை வருடங்களாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால், 2018ம் ஆண்டு முதல் பிரச்சனை இருந்து வருகிறது. எங்களுக்கு சொத்து இருக்கக்கூடிய இடம் அம்பலகாரன் பட்டி என்றால், சரிதான். நான் குடியிருப்பது வண்ணாம்பாறை பட்டி கிராமம் என்றால், சரிதான். நாங்கள் விவசாயம் செய்யக்கூடிய கண்மாய் பெயர் மாரணிக்கண்மாய் என்றால், சரிதான். எனக்கு பூர்வீக சொத்து 75 செண்ட் என்றும், காரைக்குடி செட்டியாரிடம் கிரையம் பெற்றது 64 செண்ட் என்றால், சரிதான். காரைக்குடி செட்டியாரிடம் கிரையம் பெற்று எத்தனை வருடங்களாகின்றன என்றால், 15 வருடங்கள் ஆகின்றன. எனது விவசாய நிலங்கள் அனைத்திற்கும் மாரணிக்கண்மாயில் இருந்துதான் பாசனம் என்றால், சரிதான். நாங்கள் விவசாயம் செய்யக்கூடிய நிலங்களும், எதிரிகளின் நிலங்களும் நஞ்சை நில வகைப்பாடு என்றால், சரிதான்.

2) மாரணிக்கண்மாய் எனது வயலுக்கு வடபுறம் உள்ளது என்றால், சரிதான். வயலுக்கும், எனது வீட்டிற்கும் போய்வர தூரம் 2 கி.மீ என்றால், சரிதான். காரைக்குடி செட்டியாரிடம் வாங்கிய 64 செண்ட்–க்கு மூன்று புறமும் எதிரிகளின் வயல் உள்ளது என்றால், சரிதான். மேற்படி 64 செண்ட்–க்கு மேற்கு புறம் எதிரிகளின் பங்காளிகளின் வயல் உள்ளது என்றால், சரிதான். அதேபோல் மேற்படி 75 செண்ட் நிலத்தின் நாற்புறமும் எதிரிகள் மற்றும் எதிரிகளின் பங்காளிகளின் இடம் உள்ளது என்றால், சரிதான். எனது வயலுக்குரிய பாசன வாய்க்கால்கள் அரசாங்கத்தின் ஆவணங்களின் வாய்க்காலின் வரைபடம் இருக்கும் என்றால், பார்த்ததால் தான் தெரியும்.

(**எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது**.)